கலாதீபம்
කලාදීබම්
KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.01.2024 | தீபம் 19

# நூற்றாண்டு கால ஒளிவிழா
# யாழ் மறை மாவட்ட ஆயர்
# கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
# அவர்கள் கலந்து சிறப்பித்தார்





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா 01.12.2023 வெள்ளி காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்ததுடன் ஆசிரிய மாணவர்களுக்கு விசேட அருட்பிரசாதம் வழங்கியும் ஒளிவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர் மாணவர்களுக்கான பதக்கங்களை சூட்டியும் சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தார். கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பங்குத்தந்தை அருட்பணி எம.எல்.மொன்பேட் அடிகளாரும் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி டபிள்யூ.ஜேம்ஸ் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு பரமானந்தம் சிரேஷ்ட விரிவுரையாளர்களான திருமதி பப்சி மரியதாஸ், திருமதி எஸ். கெலன் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆசிரியர் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை பிரதி அதிபர் திரு .த. கோபாலகிருஷ்ணன் கிறிஸ்தவமன்றக் காப்பாளர் திருமதி பிரபாளினி தனம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ச்சி *10பக்.*




**அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துகள்**

01.12.2023 — 31.12.2023 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

## கலாசாலையில் தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பொதுப் பாடங்களுக்கான உள்ளகப்பரீட்சை 11.12.2023 - 13.12.2023

*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்ற 2021/2022 கல்வி அணியினருக்கான உள்ளக பரீட்சைகள் தேசிய கல்வி நிறுவக ஆளணியினரின் மேற்பார்வையுடன் நடைபெற்றது. இதில் பொதுப் பாடங்களான சுகாதாரமும் உடற்கல்வியும், அழகியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இரண்டாம் மொழி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஆரம்பக்கல்வி நெறியினர் மற்றும் சிறப்புப்பாடப் பிரிவினர் என்ற வகைப் படுத்தலில் இடம்பெற்றது.*
*இதற்கான மதிப்பீடுகள் 2024 வருட ஆரம்பத்தில் இடம்பெறும் என அதிபர் தெரிவித்தார்.*

## இடநிலைப்படுத்தல் கடிதம் வழங்கும் நிகழ்வு 14.12.2023

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஈராண்டு ஆசிரிய வாண்மைத்துவ விருத்திப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து கொண்ட (2021/2022) அணி ஆசிரிய மாணவர்களுக்கு - வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இடைநிலைப்படுத்தல் கடிதங்கள் கலாசாலை பிரதி அதிபர்களான திரு க.செந்தில்குமரன் மற்றும் திரு.த.கோபால கிருஷ்ணன் ஆகியோரால் ஆசிரிய மாணவர்க ளிடம் கையளிக்கப்பட்டது. .
15.12.2023 அன்று ஆசிரியர்களாக இவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர் இவர்களது எதிர்காலம் சிறக்க கலாசாலை சமூகத்தினர் தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

ஒழுக்கம் உயிரைவிட மேலானது என்பது வள்ளுவர் எமக்களித்த வாக்காகும். ஒழுக்கத்தைப் பேணுவதில் நமது சமூகம் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகிறது. அந்த ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்கும் இன்றியமையாத்தாகும்.

ஆசிரியர் முன்னுதாரணமாகத் திகழவேண்டியவர். அவரை பார்த்து வளரும் இளம் தலைமுறையினர் தமது வாழ்வை அமைத்துக் கொள்வர். எனவே ஒழுக்க நடைமுறைகளைப் பேணுவதில் ஆசிரியர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் ஒழுக்க விழுமியங்களைப் பேணவேண்டியவர்கள் என்பதை வலியுறுத்தும் முகமாகவே கல்வி அமைச்சு ஒழுக்கக் கோவையை வகுத்து ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளது. ஆயினும் இதனை நடைமுறைப்படுத்துவதில் வெவ்வேறு நெகிழ்ச்சித் தன்மைகள் இருப்பதைக் காணமுடிகிறது.

ஆசிரியர் கலாசாலைகள், கல்வியியல் கல்லூரிகள் ஆசிரியர்களுக்கான ஒழுக்க நடைமுறைகளைப் பேணச் செய்வதில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கின்றன. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைப் பொறுத்தவரையில் பெண்கள் தலைமுடியை கொண்டையாக கட்டவேண்டியதும், காற் சலங்கை உட்பட அதீத நகைகளை அணியாமல் இருப்பதும். சேலைக்கான சட்டையை முதுகை மூடி அணியச் செய்வதுமென இறுக்கமான போக்குக் காணப்படுகிறது. ஆண்களுக்கான நடைமுறைகளிலும் சப்பாத்து அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தாடியை மழித்திருத்தல் கோல உடையை முறையாக அணிதல் தலைமுடி சரியாக கத்தரிக்கப்பட்டிருத்தலென இறுக்கமான நடைமுறைகள் பேணப்படுகின்றன.

இவ்வாறு ஒழுக்க நடைமுறைகளைப் பேணிய பின் பாடசாலைக்குச் செல்கின்ற ஆசிரியர்கள் இவற்றில் பெருபாலானவற்றைக் கைக்கொள்ளாமல் இருக்கின்ற மையை அவதானிக்க முடிகிறது. இது நடைத்தையில் ஒரு சீரான மாற்றம் ஏற்படாதிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பாடசாலை சார்ந்த கல்வி அதிகாரிகள் கைகொள்ளும் மெத்தனப்போக்கும் இத்தகைய தளர்வுகளுக்குக் காரணமாகும்.

இன்றைய பாடசாலை ஆசிரியர்கள் பலர் மேற்குறிப்பிடப்பட்ட ஒழுக்க நெறிகளை முரணாகக் கைக்கொள்ளுகிற நிலைமையையே அவதானிக்க முடிகிறது. இது சமூகத்தின் ஒழுக்க நடைமுறை தழுவிய போக்கிற்கு வாய்ப்பானதல்ல.

தனியே கோவைகளுக்கும் எழுத்து மூல ஆவணங்களுக்கும் முக்கியத்துவம் வழங்குவதை விடுத்து இத்தகைய ஒழுக்கநெறி சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்துவதற்கு கல்விச் சமூகம் முன்வரவேண்டும்.

அதிபர்

# Centenary Year Blooming buds

Centenary year Blooming buds (A collection of poems Buds IV) was launched by our former lecturer Mr V.S.Gunaseelan under the patronage of our Deputy Principal Mr. K. Senthilkumaran on 14.12.2023 Thursday at our college.

It was Compiled and guided by Ms Arullingam Sujiwa Lecturer of English and Written by Teacher Trainees of English 2021/2022 Batch.





# News in Brief - Month of December

### 01.12.2023
### Centenary Oli Vizha

Kopay Teachers' College annual oli vizha was held on 01.12. 2023 on Friday at 9 am under the leadership of the Principal Mr S.Laleeson.

In this event, Jaffna District BISHOP Rt.Rev.Dr. Justin Gnanapragasam participated as the chief guest and offered special blessings to the teacher trainees and awarded medals and certificates to the teacher trainees who won the oli vizha competitions.

### 04.12.2023
### Srilasree Arumukha Navalar Guru Pooja Day

The Guru Pooja was held on 04.12.2023 Monday at 8:30 am under the leadership of Mr S. Laleesan. This event organized by Hindu Union. Without religious variation the teacher trainees delivered talks about Arumukha Navalar.

### 05.12.2023
### Activity Based Oral English workshop Awarding Ceremony

Activity Based Oral English Workshop held on 22nd, 23rd of Nov. and 5th of Dec ,2023 at Kopay Training College for the primary sector teacher trainers who are now in Training College. This workshop entirely based on grade 1&2 teaching and learning process through activities.

It was a new experience for the teachers because the activities were new to them and going to be useful when they go back to school soon. They activitly participated and planned materials for their future use. Further they got a chance to use classroom language without any fear. Micro teach was a novel experience for them.

This training program planned and implemented by IMHO with the well experienced resources.

This workshop suggested by Dr. Thavam Thampipillai, Vice President IMHO-USA on his visit to KTC on May,2023 and Mr.S Laleesan, Principal, KTC organised this workshop.

### 07.12.2023
### Going Down Party

It was held in Rathilakshmi hall under the leadership of the Principal. There were 96 teacher trainees completed the curriculum at Kopay Teachers; College.

### 15.12.2023
### Farewell Party

The Farewell Party organized by the Lecturers' Guild of Kopay Teachers' College under the leadership of Vice Principal Mr.K. Senthilkumaran in the Conference Hall at 3 pm.

### 11.12.2023 - 13.12.2023
### The Internal Examination

The 2021/2022 batch Teacher trainees at Kopay-Teachers' College were conducted under the supervision of the National Institute of Education. General subjects such as Physical Education, Aesthetic, Information Communication Technology, Second Language Sinhala, Tamil and English subjects were categorized as common subjects.

### 14.12.2023
### School Posting letter issued

School posting letters issued by the Northern Province Department of Education sent letters of teacher trainees (2021/2022) who have completed two-year teacher development training course at Kopay Teachers' College. Vice Principals Mr K. Senthilkumaran and Mr T. Gopalakrishnan handed over the letters to the teacher trainees . They reassumed their duties as teachers on 15.12.2023 at schools.

### 15.12.2023
### New Teacher Trainees (2023/2024) Enrollment

Kopay Teachers' College academic year (2023/2024) teacher trainees enrolled on 15.12.2023. They will start their traing on 02.01.2024.

### 15.12.2023
### 2023 Academic Year successfully Completed

The academic year 2023 of Kopay Teachers' College successfully completed on 15.12.2023 and the new academic year will start again on 02.01.2023.

# கற்கைநெறியினை பூர்த்தி செய்த 2021/2022 அணியினருக்கான பிரிவுபசார விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்கை நெறியை பூர்த்தி செய்யும் 96 ஆசிரிய மாணவர்களது பிரிவுபசார வைபவம் 07.12.2023 அன்று அதிபர் தலைமையில் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

முதலாம் வருட ஆசிரிய மாணவர்களது ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரிவு உபசாரம் பெறும் ஆசிரிய மாணவர்கள் கலாசாலை யோகலிங் கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் பிரதான மண்டபத்தை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன் போது தேசியக்கொடி மற்றும் கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டன. நிகழ்வில் விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கினர்.

பிரிவுபசாரம் பெறும் ஆசிரிய மாணவர்களில் பெரும்பான்மையினர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா பட்டநெறியினை பயின்று ஆசிரியர் நியமனம் பெற்று கலாசாலைக்கு பயிற்சிபெற வந்தவர் களும்,

உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கிலத்தில் டிப்ளோமா பட்டம் பெற்று அதனைத் தொடர்ந்து ஆசிரிய நியமனம் பெற்று கலாசாலைக்கு பயிற்சி பெற வந்தவர்களுமாவர் என்பது குறிப்பிடத் தக்கது.

நிகழ்வுகளை முதலாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிதா பேகம் தொகுத்து வழங்கினார்











# பணி நயந்து வாழ்த்துகிறோம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் கழகத்தினால் 15.12.2023 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரிவு உபசார வைபவம் பிரதி அதிபர் திரு.க. செந்தில்குமரன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வை விரிவுரையாளர்கழக பொருளாளர் திரு.சி.மனோகரன் அவர்கள் நெறிப்படுத்தினார்.

விரிவுரையாளர்கள் பலர் தமது வாழ்த்தையும் மனப்பதிவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

அதேபோல் வருகை தந்திருந்த விருந்தினர்களும் தமது மனப்பதிவுகளை தெரிவித்தனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர்களாக கடமை நல்கி வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் தமது சேவைக்கான இடமாற்றத்தினை பெற்றுச் சென்ற

திருமதி சிவசக்தி ஜெயராஜா
ஆங்கிலபாட விரிவுரையாளர்
25.05.2012 - 20.04.2023

திரு கா.குகபரன்
சங்கீதபாட விரிவுரையாளர்
15.01.2013 - 02.05.2023

திருமதி பௌ.பஞ்சலிங்கம்
மனைப்பொருளியல்பாட விரிவுரையாளர்
28.01.2013 - 25.04.2023

திரு அ. பாலச்சந்திரமூர்த்தி
சமூக விஞ்ஞானபாட விரிவுரையாளர்
03.11.2014 - 28.04.2023

திரு ஜெ.பாலகுமார்
கிறிஸ்தவ பாட விரிவுரையாளர்
03.11.2014 - 25.04.2023

திரு வ.சசிகுமார்
ஆங்கிலபாட விரிவுரையாளர்
03.11.2014 - 26.04.2023

இவர்கள் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவர்களது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.






# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி ஆங்கிலம்

## IMHO சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

IMHO - இலங்கையின் அனுசரணையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆரம்ப கல்வி நெறியில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான செயற்பாட்டுடான் வாய்மொழி ஆங்கில செயலமர்வின் இறுதி வைபவம் 05.12.2023 செவ்வாய்க்கிழமை கலாசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் IMHO - LANKA இணைப்பாளர் இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திரு சு.கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பித்தார்.

பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு IMHO நிறுவனத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சான்றிதழ்களை கலாசாலை அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் மற்றும் பிரதிஅதிபர்களான திரு.க.செந்தில் குமரன், திரு.த.கோபாலகிருஷ்ணன் IMHO இலங்கையின் இணைப்பாளர் திரு சு.கிருஷ்ணகுமார் வளவாளர்களான திரு செ.தயாகரன் மற்றும் திருமதி எஸ் ஸ்ரீரங்கநாதன் ஆகியோர் வழங்கி கௌரவித் தனர்.








# இந்துமாமன்றம் நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை 04.12.2023

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்ற ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை தின விழா 04.12 .2023 திங்கட்கிழமை காலை 8:30 மணிக்கு கலாசாலை அதிபர் திரு சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற்றது

நிகழ்வின் தொடக்கத்தில் கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலைக்கு கலாசாலை அதிபர் ச. லலீசனும் இந்து மாமன்ற காப்பாளரும் விரிவுரையா ளருமாகிய திரு.கு.பாலசண்முகனும் மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் மலர் வணக்கம் செலுத்தினர். கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சமய வேறுபாடின்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குறித்து தாங்கள் அறிந்ததை சபையின் முன் குறுகிய நேர உரையாக சமர்ப்பித்தனர்.

நிகழ்வின் கருத்துரைகளை பிரதி அதிபர் ;திரு.த.கோபாலகிருஷ்ணன் மற்றும் தமிழ் த்துறை விரிவுரையாளர் திரு.வேல்.நந்த குமார் ஆகியோர் ஆற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் திரு.கு பாலஷண் முகன் நிறைவுரை ஆற்றினார். நிகழ்ச்சி யினை மாணவர் மன்ற தலைவர் சு தனசீலன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் வரவேற்புரையை க.பிரசாந் தனும் நன்றியுரை ச.கஜராஜும் நிகழ்த்தினர்.







# பெண் கல்வி



**செல்வி சுதாயினி பாலசிங்கம்**
**ஆரம்பநெறி ஆசிரிய மாணவி**
**(2022/2023)**

பாகிஸ்தானைச் சேர்ந்த இளம் போராளியான மலாலா பெண்களின் கல்வி உரிமைக்கான குரல் கொடுத்ததால் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானவர் 2012 ஆம் ஆண்டு பெண்களுக்கான உரிமை குறித்து பிரசாரத்தில் ஈடுபட்ட போது தலிபான்களால் சுடப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலைக்குச் சென்றார். மலாலா மரணத்தின் விளிம்பு வரை சென்று மீண்ட அவர் பயந்து ஒதுங்கிவிடாமல் தனது கருத்துக்களை முன்பை விட வலுவாக முன்வைத்தார்.

2013 ஆம் ஆண்டு மலாலா தனது 16ஆவது பிறந்த நாளான ஜுலை 12ல் ஐக்கிய நாடுகள் சபையை தொடர்புகொண்டு உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள் கல்வி கற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வை ஐக்கிய நாடுகள் சபை “ மலாலா தினம்” என்று குறிப்பிட்டது. பெண்கல்வி உரிமைக்காகவும் தொடர்ந்து பிரசாரம் செய்து வரும் மலாலாவுக்கு 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஐ.நா.வின் இளைஞர் தூதராகவும் அவர் இருக்கிறார்.

தற்கால கல்வி முறையை நோக்குவோமானால் இன்றைய சமூகம் ஒரு திருப்பு முனையாகவே காணப்படுகின்றது. பெண் கல்வியை ஊக்கப்படுத்தி பெண்கள் கல்வியறிவை பெற்று பல்வேறு உயர் பதவிகளை வகிக்கின்றார்கள். நாட்டின் தலைவர்களாகவும் நிறுவனங்களின் தலைவர்களாகவும் பெண்கள் இடம் பிடித்திருக்கின்றார்கள். இவை சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் விளிப்புணர்வே இதற்கு காரணமாகும்.

இன்றைய தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆண்களுக்கு இணையான அளவு பெண் ஊழியர்களும் இருக்கின்றார்கள். அந்த வகையில் பெண்கல்வியின் தேவையெனும் போது நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். குழந்தைகளை வளர்க்கும் பெரும் பொறுப்பு இன்றைக்கு பெண்களிடம் தான் இருக்கின்றது. பெண்களின் கல்வியறிவு சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்கு சரியான அறிவையும் அறிவுரைகளையும் வழங்க உதவும். குடும்பத்தின் பொறுப்புக்களை சுமக்கின்ற பெண்கள் வேர்களைப் போன்றவர்கள். வேர்கள் வலுவாக இருக்கும் போது தான் மரம் செழுமையாக இருக்க முடியும்.

பெண்கல்வியின் மூலம் குடும்பம் வலிமையாகும் போது சமூகம் வலிமையாகும். சமூகம் வலிமையாகும் போது முழு நாடும் வலிமையடையும். பெண்சமத்துவம் பற்றி பார்க்கையில் கல்வி ஒரு மனிதனுக்கு துணிச்சலைக் கொடுக்கின்றது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு கல்வி தான் மிகப்பெரிய துணிச்சலான ஆயுதமாய் இருக்கிறது.

சங்க காலத்துப் பெண்கள் உடல் வலிமையிலும் மன வலிமையிலும் சிறந்துதான் விளங்கினர்.

இடைக்காலத்தில் தான் “ அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு” என பெண்களின் வலிமையை உடைத்தனர். ஆனால் பாரதிதாசன் போன்ற பல கவிஞர்கள் பெண்கல்விக்கு ஆதரவாக வலிமையான பாடல்களை எழுதினர்.

**“ பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.**
**எட்டும் அறிவினில் ஆணுக்கு பெண்**
**இங்கு இழைப்பில்லை**
காணன்று கும்மியடி என்றார் பாரதி”

அந்த வகையில் தான் பெற்ற பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்கள் இருவரையும் சம நோக்குடன் அவர்களைப் பராமரிக்க வேண்டும். இன்று சமுதாயத்தில் வறுமை என்பது பெரும்பாலான மக்களை ஆட்டிப்படைக்கும் பெரும் நோயாக உள்ளது. இதனால் பாதிக்கப்படுவது ஆண்களை விட பெண்களேயாகும். பெண் வாழ்வு ஏற்றம் பெற கல்வி ஒன்றே வழி என பல சமூக நலவாதிகள் அன்று முதல் இன்று வரை வலியுறுத்தி வருகின்றனர்.

பெண்கள் அனைத்து துறைகளிலும் சம உரிமையுடன் இயங்கும் சமுதாயமே இரட்டைச் சக்கர சமுதாயமாகும். இல்லையேல் ஒற்றைச் சக்கரத்தில் ஓடி விரைவில் சாய்ந்துவிடும். கற்றலில் இனிமையை புகுத்திய அரசு கல்வி இனிமையாய் இருந்தால் மட்டும் போதாது. அது வாழ்க்கைக்கு பயன்படுத்துவதாயும் இருக்க வேண்டும் என்னும் நோக்கில் செயல்படுத்தி வருவது தான் பெண்களுக்கான தொழிற்கல்வி. பெண்கள் ஆண்களுக்கு அடிமைப்பட்டு கிடக்காமல் சம உரிமை பெற்று வாழ பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் கல்வி அவசியம் தேவை.

அந்த வகையில் பெண்கல்வி என்பது புள்ளி விபரங்களை பலப்படுத்துவதற்கு அல்ல பூமியை வலுப்படுத்துவதற்கேயாகும். வெறுமனே வீட்டு விளக்காய் இருக்கும் பெண்கள் ஏட்டெடுத்து படித்து நாட்டுக்கே வெளிச்சம் வீசுபவர்களாக மாற வேண்டும். தனிமனித வளர்ச்சிக்கும், குடும்ப வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும், நாட்டு வளர்ச்சிக்கும் பெண்கல்வி அவசியமானதாகும்.

**கவிஞர் கலாநிதி ச.முகுந்தன்
(தலைவர்,இந்துநாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்)
காலாசாலை அதிபருக்கு அனுப்பி வைத்த
குரல்வழி வாழ்த்துச் செய்தி**

***லலீசன் சேர்!***

*உங்களுடைய நூற்றாண்டுவிழா நிகழ்வு ஒழுங்கமைப்பு தொடர்பில் நான் தொடர்ந்து அவதானித்து வந்திருக்கிறேன்.*

*மிகவும் சிறப்பாக அனைத்து விடயங்களையும் ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி தற்போது கலாதீபம் வரையில் மிகவும் செம்மையாக நிறைவேற்றியுள்ளீர்கள் உங்களுக்கு பாராட்டுகள்.*

*ஒன்று உங்கள் அனுபவம் மற்றரையது சமகாலத்தில் உங்களுடன் பணியாற்றுகின்ற ஆளணியும் வாய்த்திருக்கும் என்றாலும் ஒரு நிகழ்வை எப்படி சிறிய சிறிய பகுதிகளிலிருந்து தொகுத்தெடுத்து கொடுமுடியாக்கி தொகுப்பினை முழுமையாக்கி வெளியிடுவது என்பது நன்றாக உள்ளது. நாங்களும் இதனை ஒரு முன்மாதிரியாக நிறைய விடயங்களுக்கு பின்பற்றலாம்.*

*தொடர்ந்து அவதானித்திருக்கிறேன் நிகழ்வுகளை ஆவணமாக்கி அதன் பரப்பினை ஒழுங்குபடுத்தி செய்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள். பார்க்கும்போது சந்தோசமாக இருக்கிறது.*

*கடைசியாக ஒவ்வொரு நிகழ்வுகளின் தொகுப்பையும் சஞ்சிகையாக தந்திருக்கிறீர்கள் மகிழ்ச்சி. எங்களுடைய தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற மிக முக்கியமான ஒரு கலாசாலை அது நிறையக் காரணங்களால் அதன் முக்கியத்துவம் ஆவணரீதியாக பேணப்பட வேண்டியது அவசியம். அதுவும் உங்களுடைய காலத்தில் அது மிகவும் முக்கியமான ஒரு மைல் கல்லையும் மடைமாற்றத்தையும் நீங்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு தந்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. வாழ்த்துகளும் பாராட்டுக்களும்.*

***இது 01.11.2023 அன்று கலாசாலை அதிபருக்கு அனுப்பிவைத்த குரல் வழி வாழ்த்துச் செய்தி***

***கலாநிதி கவிஞர் ச.முகுந்தன் அவர்களே, தங்களுடைய வாழ்த்துச் செய்தி கூட வரலாற்றில் பேணப்படவேண்டிய ஆவணம் அதனால் தங்கள் அனுமதியின்றி தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் அதனை இங்கு பிரசுரித்துள்ளோம்.***

***ஆ-ர்***

**முதலாம் பக்கத் தொடர்ச்சி......**

கலாசாலையில் நீண்ட காலமாக கத்தோலிக்க பாடத்தை சிறப்புற போதித்தமைக்காக கிறிஸ்தவ மன்றத்தின் சார்பில் விரிவுரையாளர் யே. பாலகுமார் கௌரவிக்கப்பட்டார். கௌரவத்தை பேராயர் மேற்கொண்டு மதிப்பளித்தார்.
கலாசாலையில் அண்மைக்கால வரலாற்றில் முதன்முறையாக பேராயர் ஒருவர் கலாசாலைக்கு எழுந்தருளி உள்ளமை இதுவே முதல் தடவை ஆகும்

கலாசாலைக்கு வருகை தந்த பேராயர் அவர்களை கலாசாலை சமூகத்தினர் தவில் நாதஸ்வர இசையுடன் வாயிலிருந்து மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.
பேராயர் தனது வருகையின் போது கலாசாலையில் அமைந்துள்ள மரியன்னை சிற்றாலயத்தையும் தரிசித்தார்.





# A Letter to my greatest Teacher

My dear Teacher!
You're celebrating the
World Teachers' Day in the
heaven with the God..
I can send this letter
through the moon
through the Venus.

You teach me a lot
Womb to Tomb
When I was in your womb
Until your graveyard

You taught me
At home
In the bus
On the sand
In the train
On the road
By the rivers

You teach me
How should I be?
How shouldn't I be?
You teach me
What I have to do?
What I haven't to do?

You guide me
How to pronounce the words?
How to make a sentence?
How to compose a paragraph?
Not only teach me
Mathematics, English, Thamil, Botany and Psychology
You teach me the lessons of the life

A teacher should be a
Good actor
But don't act at all for your needs
Be generous
Be neutral
Be a motivator
Be a good guide

You mould me
I should raise my voice
When I penalized
I've to teach it to my students too.

You are my library
You are my reference
You are my google
You are my wikipedia

You sculpted me
Don't be a selfish one
Be a self evaluator
We can achieve
Self- esteem
When we feel
Self-actualization

T- Tolerance
E- Empathy
A-Active
C-Care
H-Honest
E-Efficient
R-Royal
are the qualities of you
You're a role model teacher for
Hundreds and thousands of students

Not only a teacher
You were a guide
You were a friend
You were an evaluator
You were a motivator
You were a well wisher
You were a mother
I should be a teacher
Like you....

(This poem was recited by the lecturer of English Ms.Arullingam.Sujiwa on 6th.Oct.2023 in the Teachers' day celebration at Teachers' College, Kopay)

# ஒளிவிழா நிகழ்வுகளின் தொகுப்பு






















இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.01.2024 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது